# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 19, 2023 | Weekly E-paper ● August 19, 2023

## மறுக்கப்படும் எய்ம்ஸும் திணிக்கப்படும் நீட்டும்!

சுப. வீரபாண்டியன்




### மானமும் அறிவுமே மனிதருக்கு அழகு!

காசு. நாகராசன்

### சந்திராயன் ராக்கெட்!

தலையங்கம்

### ஆரியப் பிணியும் திராவிட மருந்தும்!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 19, 2023 Weekly E-paper ● August 19, 2023


# மறுக்கப்படும் எய்ம்ஸும் திணிக்கப்படும் நீட்டும் !

**சுப. வீரபாண்டியன்**

நீட் தேர்வு காரணமாகத் தமிழ்நாட்டில் தொடர்ந்து உயிர்கள் பலியாகிக் கொண்டே இருக்கின்றன. அண்மையில், தந்தையும் மகனுமாய் இருவர் தற்கொலை செய்து கொண்டு இறந்து போன செய்தி நம் நெஞ்சைப் பிழிகிறது!


நீட் தேர்வு மட்டுமில்லை, எந்த ஒரு நுழைவுத் தேர்வும் அதற்கு முன்னால் நடைபெற்ற, மாணவர்கள் தேர்வு பெற்ற அந்தத் தேர்வுகளை அவமதிப்பதாகவே இருக்கின்றன. ஒரு மாணவி அல்லது மாணவன் 12 ஆண்டுகள் கடுமையாய் உழைத்துப் படித்துப் பெற்ற மதிப்பெண்களுக்கு எந்த மதிப்பும் இல்லை என்று சொன்னால், எதற்காக 12 ஆண்டுகளை நாம் வீணடிக்க வேண்டும்? நேரடியாக நீட் தேர்வு என்பதை மட்டுமே வைத்து விடலாமே!

எனவே மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு, நீட் தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்னும் நிபந்தனையை அடியோடு நீக்கிவிட இன்றைய ஆளும் கட்சியான திமுக உறுதியாக இருக்கிறது. அதற்காகவே நீதிபதி ஏ.கே. ராசன் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டி, நீட் தேர்வை நீக்கக் கோரியுள்ளது. ஆனால் ஒன்றிய அரசு நீட் தேர்வை விலக்க முடியாது என்பதில் தேவையற்ற பிடிவாதம் காட்டி வருகிறது!

இந்த நிலையில் வேறு வழியின்றி, போராட்டக் களத்திற்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்தத தேவையை மிகச் சரியாக, தி.மு. கழகம் தொடங்கியிருக்கிறது. வரும் 20 ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் தி.மு. கழகத்தின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி ஆகியன ஒருங்கிணைந்து பட்டினிப் போராட்டத்தை நடத்த இருக்கிறார்கள்! அந்தப் போராட்டம் வெல்வதற்கும், அல்லது அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்வதற்கு அனைவரும் உடன் இருக்க வேண்டும் என்பது இன்றைய உடனடித் தேவையாக இருக்கிறது.

வேண்டாம் என்று நாம் தடுக்கும் நீட் தேர்வைக் கொண்டு வந்தே தீருவோம் என்று கூறும் ஒன்றிய அரசு, வேண்டும்




என்று நாம் கேட்கிற எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டி முடிப்பதில் மிகப்பெரிய காலத்தாழ்வைக் காட்டுகிறது!

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்னும் அறிவிப்பை, 2015 பிப்ரவரியில் ஒன்றிய அரசு வெளியிட்டது. ஆனால் அதற்குப் பிறகு எந்த ஓர் அசைவும் இல்லை. 2019 ஆம் ஆண்டு, தேர்தல் வர இருந்த காரணத்தால், 2018 ஜூன் மாதம் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்த அடிக்கல், ஒற்றைச் செங்கலோடு நின்று போய் விட்டது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அடுத்த ஆண்டு தேர்தல் வர இருப்பதால், இப்போது கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளியை (டெண்டர்) வெளியிட்டு இருக்கிறார்கள்.

இது அடுத்த கட்டத்திற்குப் போக வேண்டுமானால், இன்னொரு தேர்தல் வர வேண்டி இருக்கும் என்பது நமக்குப் புரிகிறது.

கேட்பதை மறுப்பதும், மறுப்பதைத் திணிப்பதும் ஒன்றிய அரசின் போக்காகத் தொடர்ந்து இருந்து வருகிறது! இந்தப் போக்கை அடியோடு அகற்ற வேண்டுமானால், இது ஒரு கட்சியின் போராட்டமாக மட்டும் இல்லாமல், ஒருங்கிணைந்த தமிழ்நாடு மக்களின் போராட்டமாக மாற வேண்டும்! மாறும்!

●கருஞ்சட்டைத் தமிழர் ●ஆகஸ்ட் 19, 2023

# மானமும் அறிவுமே மனிதருக்கு அழகு!

**காசு. நாகராசன்**

“ இதுதானா நீங்கள் சாதியை ஒழித்தது?”

“இதுதானா திராவிட மாடல்?”

“இதுதானா திராவிட இயக்கம் சாதித்தது?”

“பெரியார் மண் என்பது இதுதானா?”

– சமூக ஊடகங்களில் இந்தக் கேள்விகள் பரவலாக விரவிக் கிடக்கின்றன. நாங்குனேரி மாணவர்களுக்கு எதிரான ஜாதீய வன்முறைக்குத்தான் என்றில்லை,

மேல்பாதி கிராமத்தில் பட்டியல் சமூக மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்க மறுத்து இடைநிலைச் சாதியினர் போராடிய போதும், வேங்கை வயலில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட போதும் இது மாதிரியான குரல்கள் ஓங்கி ஒலித்த வண்ணமே இருந்தன, இருக்கின்றன.



இந்தக் குரல்களின் சொந்தக்காரர்கள் எல்லாம் யார் என்று பார்த்தால், எல்லோரும் சமூக ஆர்வலர்களோ, ஜாதியற்ற சமத்துவ சமூக விரும்பிகளோ, சமூகநீதிக் காவலர்களோ அல்ல. அத்தனைபேரும் ஜாதிப் பற்றாளர்கள்!

ஜாதிகாரணமாகத் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிற பட்டியல் சமூக மக்களைக் கூட ஜாதி வெறி ஆட்கொள்கிறது,

ஜாதி ஆதிக்கவாதிகளாக இருப்போரையும் கூட அது இழிவுபடுத்தி ஒரு கட்டத்தில் அழிவை நோக்கி இழுத்துப் போகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா ஜாதிகளையும் கீழே தள்ளி நானே அனைவருக்கும் எஜமானன். “நானே மூளைபலம் மிக்க உயர்குடி.

நாடாளும் அரசனே ஆனாலும் அவனும் எனக்குக் கீழேதான். ஆண்டவனே ஆனாலும் என்மந்திரத்துக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்” என்கிற உயர்ஜாதி ஆணவத்தில் இன்றளவும் மேலாதிக்கம் செய்கிறவர்கள் பார்ப்பனர்கள்.

பார்ப்பனர் அல்லாத சமூக மக்களையெல்லாம் பொய் கதைகள் புனை சுருட்டுகள், புராண இதிகாசக் கற்பனைகளால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமை கொண்டிருந்த பார்ப்பன சமூகத்தை அதன் மேல்ஜாதி ஆதிக்கத்தை எதிர்த்து இதர சமூக மக்களிடம் சமத்துவத்தைப் பேசி அணிதிரட்டி, சமூக நீதிக்காகப் போராடி அதில் குறிப்பிட்ட அளவு வெற்றியும் ஈட்டியிருக்கிற இயக்கம் திராவிட இயக்கம்.

பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூக மக்களிடையே இருந்த ஜாதிப் பிரிவினைகளை மெல்லக் குறைத்து சமத்துவ சமூகம் நோக்கிய பகுத்தறிவு பயணத்தில் இணைந்து பயணிக்கச் செய்தது திராவிட இயக்கம்.

பிரிந்து விழவேண்டிய தன்அடிமைகளை இப்படி வேற்றுமை களைந்து இணைந்து எழவைத்தாரே என்கிற கோபம்தான் பெரியார் மீது அக்கிரஹார வாசிகளுக்கு இன்னமும் கனன்று கொண்டே இருக்கிறது.

பெரியாரின் சமத்துவ சமூகக் கனவுகளுக்கு வண்ணம் தீட்டி, வடிவம் கொடுத்து உயிர்ப்பிக்கவும் செய்கிறதே திராவிட மாடல், என்கிற வன்மம்தான் திமுக மீது அவர்கள் வெறுப்பைக் கக்குவதன் காரணம் .

திராவிட இயக்க எதிர்ப்பை, பெரியார் எதிர்ப்பை, திமுக எதிர்ப்பை இவர்கள் நேரிடையாக கையாளத் துணிவற்று தங்கள் குலவழக்கப்படி சுக்ரீவன்களையும் விபீஷணன்களையும் அனுமன்களையும் ஏவி விடுகிறார்கள்.

அந்த ஏவல் கூட்டத்தின் கூக்குரல் தான் மேற்கண்ட ஏளனக் கேள்விகள்.

இதைக் கூக்குரல் என்பதை விட ஊளைச் சத்தம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

திராவிட இயக்கம், பிரிந்து கிடக்கும் சமூகத்தை ஒன்றுபடுத்தி உரிமை முழக்கம் எழுப்பச் செய்த இயக்கம்!

பகை இலக்கைச் சரியாக அடையாளப்படுத்தி அவன் சூழ்ச்சியின் ஆணிவேரை அசைத்துப் பகை வென்ற தலைவர் பெரியார்.

திராவிட இயக்கமும் பெரியாரும் மேடையில் போட்ட தீர்மானங்களை கோட்டைக் கொத்தளத்து ஆணைகளாக மாற்றியது திமுகழகம்! மாற்றி வருவது திராவிட மாடல்!

நீங்கள்தான் மாமன்னன் ரத்தினவேலு கதாபாத்திரத்தைக் கொண்டாடினீர்கள்? ஆதிக்கத் திமிரும், ஜாதி ஆணவமும், காட்டுமிராண்டித்தனமுமான ஒரு பிம்பத்தை ரசித்துக் கொண்டாடுகிற உங்கள் மனோபாவத்தால் தூண்டப்பட்ட சிறுவர்களில் சிலர் இன்று சிறையில் கிடக்கிறார்கள். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவர் உயிருக்குப் போராடியபடி மருத்துவமனையில் கிடக்கிறார்கள்.

இந்தப் பேரதிர்ச்சியில் ஒருவர் இறந்தே போய்விட்டார்.

இந்தச் சமூகத்தை இப்படிச் சிதைத்துப் போட்ட குற்றவாளிகள் நீங்கள். குலப்பெருமை, ஜாதிப்பெருமை பேசி பிஞ்சு மனதில் நஞ்சைக் கலந்த நாசகாரர்கள் நீங்கள். திராவிடமாடல் குறித்தும், பெரியார் குறித்தும் எந்தக் கேள்வியும் எழுப்புவதற்குத் தகுதியற்றவர்கள் நீங்கள்.

ஆனால், உங்களுக்கும் சேர்த்து, சமத்துவத்தை, சமூக நீதியை வேண்டுகிறது திராவிட இயக்கம். உங்கள் வளரிளம் தலைமுறைக்கும் சேர்த்து கல்வியை, அறிவைப் புகட்டி அவர்களையும் மானத்தோடு வாழவைக்கப் போராடுகிறது திராவிட மாடல்.

மானத்தை விற்று ஈனத்தைச் சுவைப்போராக இருப்போர் கொஞ்சம் திருந்துங்கள்! பெரியாரைப் படித்து திராவிடத்தைக் கரம்பிடித்து திராவிட மாடலின் துணையோடு கரைசேருங்கள்!

ஆம், மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சந்திராயன் ராக்கெட்!

ஜெர்மனியின் Verein für Raumschiffahrt என்ற ஆய்வு நிறுவனம் தான் 1930 களில் விண்வெளி ஆய்வுக்கான முதல் புள்ளியைப் போட்டது.

1957 ஆம் ஆண்டு அக்டோபர் 4 அன்று ஸ்புட்னிக் -1 என்ற முதல் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது சோவியத் ஒன்றியம். ஜுலை 20, 1969 ஆம் ஆண்டில் அப்பல்லோ - 11 மூலம் நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் இறங்கினார்.

இன்று சந்திராயன் என்ற விண்கலனின் 'லேண்டர்' பகுதியைப் பிரித்து நிலவில் இறக்கத் தலைப்பட்டு விட்டார்கள் தரையில் இருக்கும் ஸ்ரீஹரிகோட்டா விஞ்ஞானிகள்.

இது அறிவியல் வளர்ச்சியில் விஞ்ஞானிகளின் சாதனைகளுள் ஒன்று. அதே சமயம் அஞ்ஞானவாதிகள், இந்த மாதிரி வானூர்தியை அந்தக் காலத்திலேயே முன்னோர்கள் பறக்க விட்டார்கள் என்று புராணக் கதை விடுவதைப் பார்க்கலாம்.

மனிதனின் அறிவு பலத்தால் செய்யப்பட்ட விண்வெளி ஏவுகணைப் பயணம் வெற்றி பெற திருப்பதிக்குச் செல்வது என்பது மனித ஆற்றலைப் பின் தள்ளுவதாகும்.

அறிவியல் வளர்ந்த அளவுக்கு மண்ணில் மனித நேயம் வளரவில்லை என்பதை மறுப்பதற்கு இல்லை.

மதம், சாதி, கலவரம் என்பதில் வன்முறை தலைவிரித்தாட சில அமைப்புகள் இறங்கி இருக்கின்றன என்பது வேதனைக்குரியது.

என்றைக்கு வேதங்கள் என்று சொன்னார்களோ, என்றைக்கு நான்கு வருணங்கள் என்று சொன்னார்களோ அன்றே இந்த வேதனை இந்நாட்டில் இறங்கி விட்டது.

இதற்குத் தீர்வு காண முயன்ற புத்தரையும் கூடக் கடவுளாக மாற்றிவிட்டார்கள் மாற்றங்கள் வளர்ச்சியை நோக்கியதாக இருக்க வேண்டும் - சந்திராயன் போலவும், விஞ்ஞானிகள் போலவும்.

2024 ஆண்டு பொதுத் தேர்தலில் விஞ்ஞானிகள் போல ஒரு பெரிய மாற்றத்தை மக்கள் தரவேண்டும்.

I.N.D.I.A என்ற கூட்டணி ராக்கெட்டை வெற்றி பெறச்செய்து உயரப் பறக்க விட வேண்டும், சந்திராயன் போல.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# ஆளுநரின் ஆணவப் பேச்சு!

**சாரதாதேவி**

தமிழ்நாடு ஆளுநர் கடந்த ஆகஸ்ட் 12ஆம் நாள், "நீட்"டில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு தேநீர் விருந்து வைக்கிறேன் என்று அவர்களையும், அவர்களின் பெற்றோரையும் ஆளுநர் மாளிகைக்கு வரவைத்து இருக்கிறார்.

பல லட்சங்கள் செலவு செய்து, பல ஆண்டுகள் தம் குழந்தைகளை இரவு பகலாகப், புத்தகப் புழுக்களாக துன்புற வைத்துத், தேவையற்ற மனஉளைச்சலும், பண விரயமும்சேர நொந்து போன பெற்றோரே அதில் அதிகம் என்பது தெரியவில்லையா அவருக்கு? இதில் மதிப்பெண் குறையக் குறைய கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டில் அதிகப் பணம் கட்டிச் சேர்க்க வேண்டிய பெற்றொரின் கவலைகளை அவர் எங்கே அறிந்திருக்கப் போகிறார்.

ஆளுநர் ஏதோ சாதனையாளரைப் போலவும், பரமகுரு போலவும் "நீட்"டின் மகத்துவத்தால் அவர்களுக்கு மருத்துவ இடம் கிடைத்தது எனவும் அதன் மூலம் "நீட்" பற்றிய பொய்ப் பரப்புரைகள் வீழ்த்தப்பட்டதாகவும் கதையளந்து இருக்கிறார்.

தமிழ்நாட்டில் நம் அரசால் நம் மக்கள் வரிப் பணத்தில் ஏற்படுத்தப்பட்ட மருத்துவக் கட்டமைப்பை இவர்கள் நாசமாக்கியதை உணராதவர்களா நம் பெற்றோர்?

அதில் அம்மாசியப்பன் ராமசாமி என்ற ஒரு மாணவனின் தந்தை எழுந்து, "என் மகள் "நீட்"டில் தேர்ச்சி பெற்று மருத்துவக் கல்லூரியில் சேருகிறாள். ஆனாலும் சொல்கிறேன், நீட் தேவையற்றது. எங்கள் மாநிலத்தில் ஏற்கனவே எங்களுக்கு நல்ல கட்டமைப்பு இருக்கிறது. என் போன்று செலவு செய்ய இயலாத பெற்றோர் தங்கள் குழந்தைகளின் கனவை எவ்வாறு நிறைவேற்றுவர்? அதனால் நீங்கள் "நீட்" சட்ட வரைவில் கையெழுத்திட வேண்டும்" எனக்கேட்டிருக்கிறார்.

அவ்வளவு தான், ஆளுநர் மிக மோசமாக அவரை முறைத்து, அவரிடமிருந்த ஒலி வாங்கியைப் பிடுங்கச் செய்து, தான் எக்காரணம் கொண்டும் அதில் கையெழுத்து போடப் போவதில்லை எனப்பொங்கி இருக்கிறார்.

தமிழ்நாடு அரசு எப்படியாவது "நீட்"டை ரத்து செய்துவிடும் என நம்பிக்கை கொண்டிருந்த ஏழை எளிய தமிழ் மாணவர்களின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதாக விழுந்திருக்கிறது அச்செய்தி. ஒரு மாணவரும், அவருடைய தந்தையும் அடுத்தடுத்து தற்கொலை செய்து இறந்திருக்கிறார்கள்.

இரண்டாம் முறையாக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பியும், அவருக்கு அதிகாரமே இல்லை என குடியரசுத் தலைவரிடம் அனுப்பி அங்கு கிடப்பில் போடப் பட்டிருக்கிறது "நீட்" மசோதா. இதுவரை 16 மாணவ மாணவிகளும் ஒரு பெற்றோரும் "நீட்"டால் உயிரிழந்து இருக்கின்றனர்.

மனித உயிர்களின் மாண்பறியாத இந்த சனாதனிகள் ஆளுநராக அல்ல ஆண்டவனாக இருந்தாலும் விரைவில் வெளியேற்றப்படுவர்.

# ஆரியப் பிணியும் திராவிட மருந்தும்!

**மதிவாணன்**

எழுபத்தி ஏழாம் விடுதலை நாள் விழாவையொட்டி, தில்லியில் மோடியும், தமிழ்நாட்டில் தளபதியும் கொடியேற்றி மக்களுக்கு உரையாற்றியதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஒன்பது ஆண்டுகளாக தில்லியைக் கையில் வைத்திருக்கும் மோடி, தான்செய்த சாதனைகளைப் பட்டியலிடாமல், அடுத்த ஆண்டு சாதனைப் பட்டியலை வெளியிடுவேன் என்றும், அதற்கு அடுத்து வரும் தேர்தலில் மேலும் ஒரு வாய்ப்பு தருமாறுமக்களை கேட்கிறார். இது நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரையா? தேர்தல் பரப்புரையா? இதுகாறும் எந்த உருப்படியான சாதனையும் செய்யவில்லை என்பதை அப்பட்டமாகக் காட்டும் உரை என்றும் கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் இரண்டு ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் திராவிட மாடல் அரசின் சாதனைகளைத் தளபதி ஸ்டாலின் கூறுகையில், மகளிர் கட்டணமில்லா பயணம், 153 ஒப்பந்தங்கள் கையெழுத்து, சிறுகுறு தொழில் தொடக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு, ஏற்றுமதி/இறக்குமதி உயர்வு, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காப்போம் 48, நான் முதல்வன் திட்டம், உங்கள் தொகுதியில் முதல்வர் போன்றவற்றைப் பட்டியலிட்டார்.

விடுதலைப் போராட்ட வீரர்களையும், நிகழ்வுகளையும் நினைவுக்கூர்ந்த முதலமைச்சர், முழுமையான சுதந்திரம் நோக்கிச் செல்ல மக்களிடையிலான ஏற்றத்தாழ்வைப் போக்க சமத்துவ நாடு அமைய மக்களுக்கு சுட்டிக்காட்டவும் தவறவில்லை.



ஆனால் 10 ஆண்டுகளாகத் கொடியேற்றும் மோடி அவர்களோ, இன்னமும் காங்கிரசைக் குறை கூறத் தவறவில்லை. ஊழல், வாரிசு அரசியல், சந்தர்ப்பவாதம் என்று பேசுகிறார். ஊழல் குற்றச்சாட்டில் சிக்குபவர்கள் பாஜக-வில் இணைந்தவுடன் புனிதராக்கும் திட்டம் குறித்து பிரதமர் பெருமை கொள்ளலாம். ஆனால் இரபேல் ஊழல் குற்றச்சாட்டு, PM care நிதியின் மர்மம், பெருநிறுவன கடன் தள்ளுபடியும், பாஜகவிற்கு பெருநிறுவனம் தரும் நன்கொடையும் எனப்பல வெளிப்படையான அய்யங்கள் அப்படியே இருக்கின்றன. பாஜகவின் வாரிசு அரசியலின் பட்டியல் ஏனையக் கட்சிகளை விடப் பெரியதாக இருக்கிறது. ஆட்சியைப் பிடிக்க யாருடனும் கூட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பேரம் எனப் பல சந்தர்ப்பவாதம் செய்யும் கட்சியில் இருந்து தான் பிரதமர் இவ்வாறு பேசுகிறார்.

80 விழுக்காட்டுக்கும் 20 விழுக்காட்டுக்கும் ஆன தேர்தல் என்று கூறிய கட்சிதான் பாஜக. இதில் காங்கிரசை எதிர்ப்புறம் வைக்க, ஒருதரப்பினரை திருப்திப்படுத்தும் அரசாக இருந்ததாகக் கூறுகிறார் பிரதமர். தமிழ்நாடு முதலமைச்சரோ வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்; ஒற்றுமையில் மகிழ்ச்சி காண்போம் என்று நாட்டு மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

தேசம் முதன்மை எனக் கூறும் பிரதமர், அவர் ஆட்சியில் வேலையின்மை அதிகரித்து இந்தியர்கள் தவிக்கின்றனர். மக்களிடையே வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது. இதனிடையே முன்னேற எந்தப் பாதையும் சுட்டிக்காட்டாத பிரதமர், 2047இல் வளர்ந்த நாடாக மாறும் எனக் கூறுகிறார்.

திராவிடக் கருத்தியலான சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இனவுரிமை, மாநில சுயாட்சியை முன்வைத்து அரசாளும் திராவிட மாடல் அரசை வழிநடத்தும் தளபதியோ, வளர்ச்சி என்பது பொருளாதாரம் மட்டும் அல்ல. பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஒருசேர வளர்வதே முழுமையான வளர்ச்சி எனத்தனது அரசின் பாதையைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

ஆக இந்த உரைகளில் இருந்தே தெளிவாகத் தெரிவது யாதெனில், ஆரியக் கருத்தியல் மக்கள் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பிணியாகிறது, திராவிடம் மருந்தாக இருக்கிறது. ●

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**தலைமைச் செயற்குழுத் தீர்மானங்கள் (சென்னை 13-08-2023)**

1) திராவிடம் 100 வலையொளியை ஏன் முடக்கக் கூடாது என்று வந்திருக்கின்ற அறிவிக்கையைத் தொடர்ந்து சட்டப் படியாகவும், அரசியல் வழியிலும் அதை சந்திப்பது என்றும்,

2) உடனடியாக "இனி" "ஈரோடு" "யாதும் ஊரே" "வெங்காயம்" ஆகிய பெயர்களில் வலையொளிக்கான பதிவுகளைச் செய்வது என்றும்,

3) திராவிடப் பள்ளி தொடர்பாகத் திராவிட மாடல் ஆய்வு மய்யம் ஒன்று ஏற்படுத்திட, சென்னையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை, தமிழ்நாடு அரசிடம் கேட்டுப் பெறுவது என்றும்,

4) திராவிடப் பள்ளி இணை ஒருங்கிணைப்பாளர்களாகத் தோழர்கள் கார்த்திக், வெற்றிச் செல்வன், மதிவாணன் லோகபாலன் ஆகியோர் நியமிக்கப் படுகிறார்கள் என்றும்,

5) திராவிடப் பள்ளி மாணவர் சேர்க்கைக்கு ஒருங்கிணைப்பாளர் தோழர் உமாபதி வழிகாட்டுதலின்படி தோழர்கள் சிற்பி செல்வராஜ், மதுரை கருப்பையா, சாரதாதேவி, திருச்சி மதியழகன் ஆகியோர் பொறுப்பேற்கிறார்கள் என்றும்,

6) திராவிட இயக்கத் தமிழர் பேரவை மற்றும் திராவிட நட்புக் கழகத் தோழர்கள் திராவிடப் பள்ளியில் இணைந்து பயன்பெற வேண்டும் என்றும்,

7) திராவிடப் பள்ளி அடுத்த ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை 16-08-2023 ஆம் நாளில் இருந்து தொடங்கும். 1000 மாணவர்களைச் சேர்க்க இவ்வாண்டு திட்டமிடப்படுகிறது என்றும்

8) 2023 அக்டோபர் மாதம் 22ஆம் நாளில், திருப்பூரில் செயற்குழு மற்றும் பொதுக்குழு நடத்த முடிவு செய்யப் படுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian